திருப்பீட பல்சமய உரையாடல் அவை

# *கிறித்தவர்களும் முஸ்லீம்களும்:*
# *சமாதானக் கலாச்சாரம் உருவாக்க*
# *அழைக்கப்பட்டுள்ளனர்.*

இரமதான் முடிவில் வழங்கும் செய்தி
ஈத்துப் பண்டிகை 1428 கஜீரா / கி.பி. 2007

வத்திக்கான் நகரம்

அன்பிற்குரிய முஸ்லீம் நண்பர்களே!

1. மாதம் நீண்ட நோன்போடும் ஜெபத்தோடும் முடிகின்ற இரமதானின் ஈத்துப்பண்டிகையை மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்ற இந்த வேளையிலே, உங்கள் அணைவருக்கும் இதயம் நிறைந்த நட்புறவின் நல்வாழ்த்துக்களை திருப்பீட பல்சமய உறயாடல் அவையின் சார்பாக வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாதமானது முஸ்லீம் சமுகத்தினருக்கு மிக முக்கியமான ஒன்று. ஓவ்வொரு தனி நபருக்கும் அவரது தனிப்பட்ட குடும்ப சமூக வாழ்விற்க்கு தேவையான புது சக்தியை தருகிறது. நாமணைவரும் அவரவர் மத கோட்பாடுகளுக்கு சாட்சியம் வகிக்க வேண்டும் என்பது தேவை. ஆனால் அதே சமயம், பொது நன்மைக்காக சேர்ந்து உழைக்க வேண்டும் என்ற ஆர்வத்தில், நமது வாழ்வு கூடுதல் ஒருங்கிணைந்ததாகவும், படைத்தவனின் திட்டத்தோடு சேர்ந்து போவதாகவும், மற்ற மத சகோதர சகோதரிகளோடும் நல் மனதுள்ள அணைவரோடும் கூடுதல் தோழமையிலும் சகோதரத்துவத்திலும் சேவை செய்யக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

2. மத விசுவாசிகளாய நாம், கலக்கம் நிறைந்த காலங்களில் கடந்து செல்லும்போது, கடவுளின் ஊழியர்கள் என்ற நிலையில், சமாதானத்திற்காக செயல்படவும், சுதந்திரமான மத செயல்பாடுகளால், எங்குமுள்ள தனிப்ட்ட சமுக கோட்பாடுகளுக்கு தகுந்த மரியாதை கொடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். மத சுதந்திரம் என்பது, வழிபாட்டு சுதந்திரதோடு மட்டும் குறைக்கப்பட்டுவிடாமல், இது ஒவ்வொரு தனி மனிதனின் உரிமை என்ற நிலையிலும், மனித உரிமையின் மூலைக்கல் என்ற நிலையிலும், மனசாட்சி சுதந்திரத்தின் ஒரு முக்கிய பகுதியாக காணப்படவேண்டும். சமாதானமும் தோழமையும் நிறைந்த பண்பாட்டை மனிதர்களிடையே கட்டியெழுப்புவதும், கூடுதல் சகோதரத்துவம் நிறைந்த சமூகத்தை கட்டி எழுப்பும் இந்த பணியிலே, ஒவ்வொரு நபரும் உருதியான பங்கு கொண்டு, கடவுளின் சாயலான மனிதனை காயப்படுத்துகின்ற, எந்த மதத்தாலும் தூண்டப்படமுடியாத வன்முறையை அடியோடு தவிர்க்கவும் மறுக்கவும் தேவையான எல்லா செயல்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டியது இன்றைய முக்கிய தேவையாகிறது. வன்முறை என்பது, சிறப்பாக பல சாதாரண உயிர்களை கண்மூடித்தனமாக பரிக்கின்ற பயங்கரவாதம் என்பது, உருவெடுக்கும் குழப்பங்களுக்கு தீர்வுதர இயலாதது மட்டுமல்லாமல், தொடர் சங்கிலியான அழிவின் வெறுப்புக்கு இட்டு செல்லுகின்ற, மனித இனத்தையும் சமூகத்தையும் அழிவின் பாதைக்கு கொண்டு செல்லுகின்றதொன்று என்பது நமக்கு தெரியும்.

3. மத விசுவாசிகள் என்ற நிலையில், சமாதானம், மனித உரிமை, ஒருவரையொருவர் மதிக்கும் சுதந்திரம் ஆகியவற்றை பயிற்றுவிப்பது மட்டுமல்லாமல், தொடர்ந்த உருதியான சமூக பிணைப்பை உருதி செய்யவும் நமக்கு கடமை உண்டு. ஏனெனில், வேறுபடுத்தி காணும் உணர்வின்றி, மனிதன் தான் மற்ற தனது சகோதர சகோதரிகளை பாதுகாக்க வேண்டும். உலகில் எந்த தனி மனிதனும், அவனது இனம் மதம் குண நலன்களின் பொருட்டு ஒதுக்கி வைக்கப்படக்கூடாது. வெவ்வேறு மத

பழக்கவழக்கங்களை நாம் கொண்டிருந்தாலும், ஒருமித்த நிலையில், எல்லா மனித படைப்புக்களையும் மதிக்ககூடிய விதத்தில், மனிதர்களிடையே அன்பின் செய்தியை கொள்கையாக பரப்ப வேண்டும். இன்னும் சிறப்பாக, எதிர்கால உலகை நடத்தக்கூடிய இளைஞர்கள் இத்தகைய உணர்வில் வளர உறுதி செய்ய நமக்கு கடமை உண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக, குடும்பங்களும் கல்விப்பணியில் ஈடுபட்டுள்ளோரும் அரசியல் மத தலைவர்களும், உண்மையான கொள்கையை பரப்ப கடமைப்பட்டுள்ளனர். அதேபோல, தன்னை சுற்றியுள்ளவர்களை எவ்வித வேறுபாடுகளுமின்றி மதிக்கும் விதத்தில், தான் இந்த சகோதர சகோதரிகளோடுதான் சேர்ந்து வாழ அழைக்கப்பட்டிருக்கிறேன் என்ற உணர்வோடு வாழுவதற்க்கு தேவையான பொது கல்வியை, ஒவ்வொரு இளைஞன் இளம்பெண்ணுக்கும், அவரவருடைய தனிப்பட்ட சூழலுக்கு தகுந்த விதத்தில், இவர்கள் வழங்க வேண்டும். இப்படியாக, தனிப்பட்ட வாழ்விற்கும் சமூக வாழ்விற்கும் தேவையான அடிப்படை மனித மதிப்பீடுகளையும் விழுமியங்களையும் இளைஞர்களுக்கு பயிற்றுவிப்பது அதிக தேவையாகிறது. மனித பண்பாடற்ற ஒவ்வொரு செயலும் சமூக வாழ்வில் கொணரக்கூடிய பாதிப்புக்களை, இளைஞர்களின் நினைவுக்கு கொண்டுவர வேண்டும். ஓவ்வொரு சமூகத்தின் மொத்த உலகத்தின் பொது நன்மைதான் பாதிப்பிற்கு உள்ளாகுகிறது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

4. இத்தகைய உணர்வோடுதான், கிரித்தவர்களும் முஸ்லீம்களும் மேற்கொள்கின்ற ஆழமான உரையாடல்கள், கல்வி கலாச்சார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படவேண்டும். இப்படியாக, இளைய தலைமுறையினர், மத பண்பாடு ரீதியாக ஒருவருக்கொருவர் தடையாக மாறிவிடாமல், மனுக்குலத்தின் உண்மையான சகோதர சகோதரிகளாக வாழும் பொருட்டு, மனுக்குலத்தின் சேவைக்காக, எல்லா சக்திகளையும் ஒன்று திரட்ட வேண்டும். சமூகத்தில் தவறான முத்திரை பதிக்கின்ற தீராத போராட்டங்களிலிருந்தும் பல்வேறு அழுத்தங்களிலிருந்தும் விடுதலைபெற கருவியாக உதவுவதுதான் உரையாடல். இந்த உரையாடல், எல்லா மனிதர்களும் அமைதியிலும் சமாதானத்திலும், ஒருவரையொருவர் மதித்து, அவர்களது குழுக்களில் ஒற்றுமையோடு வாழ வழி செய்கிறது.

இத்தகைய நிலயை அடைய, என் வார்த்தைகளுக்கு செவிமடுக்குமாரு உங்களை மனமார கேட்டுக்கொள்கிறேன். கிறித்தவர்களும் முஸ்லீம்களும், சந்திப்புக்கள் பரிமாற்றங்கள் வழியாக, எல்லா மக்களின் நல்ல எதிர்காலத்திற்காகவும் சமாதானத்திற்காகவும், ஒருவருக்கொருவர் தகுந்த மதிப்புக்கொடுத்து ஒன்று பட்டு உழைக்கவேண்டும். இன்றைய இளைஞர்கள் தொடர்ந்து பின்பற்றுவதற்கு இது எடுத்துக்காட்டாகவும் அமையும். இதனால் இளைஞர்களுக்கு சமூகத்தின்மீது புத்துணர்வு தோன்றும், இத்தகைய உருமாற்றத்திலே பங்குகொண்டதன் பலனையும் அவர்களால் காண முடியும். கல்வியும் எடுத்துக்காட்டான வாழ்வும் எதிர்காலத்தில் அவர்களுக்கு நம்பிக்கையின் ஊற்றாகத் திகழும்.

5. தங்களின் நற்களஞ்சியத்தை ஒருவர் மற்றவரோடு பகிர்ந்து கொள்வதற்காகவும், மதிப்பு நிறைந்த சாட்சிய விசுவாசிகளை

வார்த்தெடுப்பதிலே சிறப்பான கவனம் செலுத்துவதற்காகவும், கிறித்தவர்களும் முஸ்லீம்களும், தொடர்ந்து நட்புறவையும், வளர்ச்சிக்கு வழி வகுக்கும் உறவையும் வளர்த்துக்கொள்ளவேண்டும்.

அன்புள்ள முஸ்லீம் நண்பர்களே, உங்களின் பண்டிகையை கொண்டாடும் இவ்வேளையிலே மீண்டும் ஒருமுறை என் இதயம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டு, இரக்கமும் சமாதானமும் நிறைந்த கடவுள் உங்கள் அணைவருக்கும் உடல் நலனும் அமைதியும் வளமும் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் ஜெபிக்கிறேன்.

Jean-Louis Card. Tauran

தலைவர்

Pier Luigi Celata

செயலர்


PONTIFICAL COUNCIL FOR INTERRELIGIOUS DIALOGUE
00120 Vatican City
Phone : 0039 06 698 84 321
Fax : 0039 06 698 844 94
E-mail : dialogo@interrel.va